A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 59 / 2020**

திரு. S.மகேஷ், **BY RPAD**
த/பெ. N.N. சுப்பிரமணியன்,
348, விவேகானந்தர் சாலை,
நாராயணவலசு,
ஈரோடு – 638 101. . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. S.மகேஷ்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

2. உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி மின்பொறியாளர்/நாராயணவலசு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நசியனுார் மெயின் ரோடு,
நாராயணவலசு, ஈரோடு – 638 009. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு.S.ஆனந்த்/உதவி மின்பொறியாளர்/நாராயணவலசு)

**கேட்புரை நாள்: 07–01–2021**

**ஆணை நாள் : 15–03–2021**

16.11.2020 அன்று பெறப்பட்ட திரு. S.மகேஷ், த/பெ. N.N. சுப்பிரமணியன், 348, விவேகானந்தர் சாலை, நாராயணவலசு, ஈரோடு – 638 101 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண். 59/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 07.01.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின்

மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

## <u>ஆணை</u>

### 1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

மேல்முறையீட்டாளர் தான் செலுத்திய வளர்ச்சி நிதி ரூபாய் 1,000/– பதிவுக் கட்டணம் மறு மின் இணைப்பு கட்டணம் ரூபாய்.100/– மற்றும் அபராத கட்டணம் ரூபாய்.17/– ஆக மொத்தம் ரூ.1,117/– தொகையை மற்றும் வழக்கு செலவு தொகையும் மின் வாரியம் தனக்கு திருப்பி வழஙக உத்தரவிடுமாறு விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 மின் இணைப்பு எண் 008–008–607, 18.10.2013 அன்று பெறப்பட்டு அப்பொழுது மின் வாரியத்தில் அமலில் இருந்த வைப்பு நிதி, இணைப்புக்கட்டணம், மின் அளவி கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்டுவிட்டதாகவும், இதற்கு தற்போது மறுபடியும் மின்வாரியம் வளர்ச்சி கட்டணம் மற்றும் அபராத கட்டணஙகளை செலுத்துமாறு கடிதம் வழஙகியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

2.2 இது குறித்து மேல்முறையீட்டாளர் கடிதம் மூலம் விளக்கம் கேட்டதற்கு மின்வாரிய ஆணையின்படி வளர்ச்சி கட்டணம் விதிக்கப்பட்டுள்ளதாக செயற்பொறியாளர் பதில் அளித்துள்ளார். எனவே மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், ஈரோடு மின்பகிர்மான வட்டத்தை 28.02.2020 அன்று புகார் அளித்துள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், ஈரோடு மின்பகிர்மான வட்டம், 30.09.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –**

ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **30.09.2020** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"<u>முடிவுரை</u>*
>
> *மனுதாரர் மற்றும் வாரியதரப்பினர் மன்றத்தில் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில் மனுதாரர் திரு. S.மகேஷ், த/பெ.(லேட்) N.N. சுப்பிரமணியன் அவர்களின் மின் இணைப்பில் கூடுதல் மின் பளு உபயோகத்திற்கான வளர்ச்சி கட்டணம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையின் வழங்கல் விதி எண் 5(2)(II)(c)(III)(A) ன்படி கணக்கீடு செய்யப்பட்டு மின் வாரியத்தால் வசூல் செய்யப்பட்டது சரியே எனவும் மனுதாரர் செலுத்திய தொகை தள்ளுபடி செய்ய இயலாது எனவும் இம்மன்றம் முடிவு செய்யப்படுகின்றது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக **07.01.2021** அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் திரு. S.மகேஷ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர் திரு.S.ஆனந்த்/ உதவி மின்பொறியாளர்/நாராயணவலசு, ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:

5.1 மின் இணைப்பு எண் 008–008–607, 18.10.2013 அன்று பெறப்பட்டு அப்பொழுது மின்வாரிய கழகத்தில் அமலில் இருந்த வைப்பு நிதி, இணைப்பு கட்டணம், மின் அளவி கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்டது. தற்பொழுது 05.10.2019 தேதியிட்ட மின்வாரிய ஆணையின்படி தன் இணைப்புக்கு வளர்ச்சி கட்டணம், அபராத கட்டணம் ஆகியவைகளை கோரி எந்தவித முன் அறிவிப்பு கடிதமும் வழங்காமல் தனக்கு கட்டணம் விதித்தது பொருந்தாது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.2 மேல்முறையீட்டாளர் கடந்த 04.02.2020 அன்று துணைநிதி அலுவலர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம், ஈரோடு அவர்களுக்கு வளர்ச்சி கட்டணம் தொடர்பாக விளக்கம் கேட்டு கடிதம் அளித்ததாகவும், அதற்கு 13.02.2020 தேதியிட்ட கடிதத்தில் செயற்பொறியாளர்/நகரியம்/ஈரோடு அவர்கள் அளித்த விளக்கத்தில் மின்வாரிய ஆணையின்படி வளர்ச்சி கட்டணம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், கணிணியில் தானாகவே பதிவாகியுள்ளது என்றும் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் கூறியுள்ளார்.

5.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற சட்டத்தின்படி உரிய காலத்தில் மின் நுகர்வோரின் குறையை விசாரிக்காமலும், விசாரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள் நுகர்வோருக்கு இறுதி உத்தரவு வழஙகாமல் காலம் தாழ்த்தி வழஙகியுள்ளதாகவும், ஆகவே தான் செலுத்திய வளர்ச்சி நிதி ரூபாய் 1,000/– பதிவுக் கட்டணம் மறு மின் இணைப்பு கட்டணம் ரூபாய். 100/– மற்றும் அபராத கட்டணம் ரூபாய் 17/– ஆக மொத்தம் ரூ.1,117/– தொகை மற்றும் வழக்கு செலவு தொகை ஆகியவற்றை மின் வாரியம் தனக்கு திருப்பி வழஙகிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 எதிர்மனுதாரரின் வாதஙகள்:

6.1 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மின் இணைப்பு எண் 008–008–607, ஈரோடு நகரிய கோட்டம், மேற்கு/ஈரோடு உபகோட்டம், நாராயணவலசு, பிரிவு அலுவலகத்தில் கடந்த 22.10.2013 அன்று 800 watts மின் பளுவிற்கு மின் இணைப்பு வழஙகப்பட்டு, அதற்குண்டான கட்டணம் தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுஙகுமுறை ஆணையின் படி வசூல் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதன் பின்னர் 17.10.2019 அன்று மாதாந்திர கணக்கீட்டின் போது அனுமதிக்கப்பட்ட 800 watts மின் பளுவிற்கு பதிலாக 900 watts மின் பளு பதிவாகி இருந்தது கண்டறியப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி (supply code 5(2)(II)(c) – (III)(A)) அதிகமாக உபயோகிக்கப்பட்ட மின் பளுவிற்குண்டான கட்டணங்கள் அடுத்து வரும் மாதாந்திர மின் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டதாகவும் (கணினியில் தானாகவே பதிவாகி விடும்) எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இது குறித்து மேல்முறையீட்டாளருக்கு மின் கட்டணம் செலுத்த வந்த பொழுது தெரிவிக்கப்பட்டதோடு மின் கட்டண இரசீதிலும் நிலுவைத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்கண்ட நிலுவைத் தொகை 06.03.2020 அன்று செலுத்தப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே அதிகமாக மின்பளு பயன்படுத்தியதாக வசூல் செய்யப்பட்ட தொகை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி வசூல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

7.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரின் இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 18.10.2013 அன்று பெறப்பட்ட தனது மின் இணைப்பு எண் 008–108–607–க்கு அப்போது அமலில் இருந்த வைப்பு நிதி, இணைப்புக் கட்டணம், மின் அளவி கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் அனைத்தும் செலுத்தப்பட்டதாகவும், 13.01.2020 அன்று மின் கட்டணம் செலுத்த சென்றபோது கூடுதல் வளர்ச்சி கட்டணம் மற்றும் அபராதக் கட்டணம் செலுத்த கூறியதாகவும் தெரிவித்துள்ளார். 13.02.2020 நாளிட்ட கடிதத்தில் 05.10.2019 மின்வாரிய ஆணையின்படி வளர்ச்சி கட்டணம் எதிர்மனுதாரரால் கோரப்பட்டதாக தெரிவித்ததாகவும், ஆனால் முன்அறிவிப்பு கடிதம் வழங்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார். எனவே, தான் செலுத்திய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 1000/–, மறு இணைப்பு கட்டணம் ரூபாய் 100/– மற்றும் அபராத கட்டணம் ரூபாய் 17/– ஆக மொத்தம் ரூபாய் 1,,117/– தொகையை திரும்ப வழங்குமாறு மேல்முறையீட்டாளர் வேண்டுகிறார்.

7.3 எதிர்மனுதாரர் தங்களுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு 22.10.2013–ல் 800 watts மின் பளு (Tariff V) ல் வழங்கப்பட்டதாகவும், 17.10.2019 அன்று

மாதாந்திர கணக்கீட்டின் போது அனுமதிக்கப்பட்ட 800 watts மின் பளுவிற்கும் மேலாக 900 watts மின் பளு பதிவாகியிருந்ததாகவும், அதிமாக உபயோகிக்கப்பட்ட மின் பளுவிற்குண்டான கட்டணங்கள் அடுத்து வரும் மாதாந்திர மின் கட்டணத்துடன் கணினியில் தானாக பதிவாகிவிடுமென்றும், தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(2)(ii)c–(III)(A)-ன்படி மேற்படி கட்டணம் வசூலிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மின் கட்டணம் செலுத்த வந்த போது இதுகுறித்து மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், பிறகு மின்கட்டண ரசீதில் நிலுவைத்தொகை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளாரின் அனுமதிக்கப்பட்ட மின் பளு 800 watts ஆகும். 17.10.2019 அன்று மின்பயன்பாடு கணக்கிடும்போது மின் பளு 900 watts ஆக பதிவாகியுள்ளது. மின் நுகர்வோர் பேரேட்டினை ஆராயும்போது 10/2016–ல் 0.85 kw–ம், 10/2019–ல் 0.97 kw–ம் மின் பளு பதிவாகியுள்ளதாக அறிய முடிகிறது. அதாவது 10/2019–ல் இரண்டாவது முறையாக அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட அதிகமாக பயன்பாடு பதிவாகியுள்ளது. தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(2)(ii)c–(III)(A)-ன்படி இரண்டாவது தடவை அதிகப்படியாக பதிவான பின் ஒரு மாதத்திற்குள் மின் நுகர்வோருக்கு தெரிவித்து தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மின் பளுவை பதிவாகியுள்ள மின் பளுவிற்கு உயர்த்தியும், அதற்குண்டான அனைத்து கட்டணங்களையும் அடுத்து வரும் மின் கட்டணத்தில் சேர்க்கப்படவேண்டுமென தெரிகிறது.

7.5 10/2019–ல் இரண்டாவது முறையாக மின்பளு அனுமதிக்கப்பட்ட 0.8 kw மின் பளுவைவிட அதிகமாக பதிவாகியுள்ளதால் 18.10.2019 அன்று புதிய மின் பளு 1 kw ஆக மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் Order in M.P. 7 of 2018 dt. 03.10.2019–ன் படி 05.10.2019 லிருந்து புதிய கட்டணங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளதால் 1 Kw–க்கு வளர்ச்சி கட்டணம் ரூபாய் 1000/– வசூலிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. தற்போதைய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 1000/– per kw என்றும் முந்தைய காலங்களில் ரூபாய் 400/– per service connection என்றும் அறியப்படுகிறது.

7.6 மேல்முறையீட்டாளர் அனுமதிக்கப்பட்ட மின் பளு 0.8kw விட அதிகமாக முதலாவதாக 0.85 KW–ம் இரண்டாவது முறை 0.97 kw–ம் உபயோகப்படுத்தியுள்ளார். ஆகையால் புதிய மின் பளு 1 Kw என அனுமதிக்கப்பட்டு வளர்ச்சி கட்டணம் வசூலிக்கப்பட்டதாக

எதிர்மனுதாரர் தெரிவிக்கிறார். ஆனால் புதிய ஆணை 05.10.2019–ல் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே மாதாந்திர நிலைக் கட்டணம் (monthly fixed charge) 1 kw–க்கு தான் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பின் மின்பளு அதிகபட்சமாக 0.97 கிலோ வாட் என பதிவாகியுள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின்கட்டண ஆணை 11.08.2017–ன்படி மாதாந்திர நிலைக் கட்டணம் ஒரு கி.வா அல்லது அதன் பகுதிக்கு என்ற அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். அந்த வகையில் மேல்முறையீட்டாளரின் மின்பளு 1 கி.வா என்ற அடிப்படையில்தான் கணக்கிடப்படவேண்டும்.

7.7 மேலும் இவ்வழக்கில் மின் இணைப்பு எண் 008–108–607–ன் 0.8 kw, 0.85 kw அல்லது 0.97 kw என்ற எவ்வகையிலும் மின்பளுவிற்கான மாதாந்திர நிலைக்கட்டணமானது 1 கி.வா என்ற வகையில் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. அத்தகைய நேர்வில் மேல்முறையீட்டாளரிடம் கூடுதலாக வசூல் செய்யப்பட்ட வளர்ச்சி கட்டணம் ரூபாய் 1000/– ஏற்படையதல்ல என்று நான் கருதுகிறேன். எனவே, தற்போது வசூல் செய்யப்பட்டுள்ள புதிய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 1000/–ஐ மேல்முறையீட்டாளருக்குத் திரும்ப வழஙகுமாறு ஆணையிடுகிறேன். இருப்பினும் மின் கட்டணம் தாமதமாக கட்டப்பட்டுள்ளதால், மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டு மறு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதால், மறு இணைப்பின்போது செலுத்தப்பட்ட ரூபாய் 117/– ஐ மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழஙக இயலாது என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் ஒழுஙகுமுறை விதிகளில் குறித்துரைக்கப்படாத வழக்கு செலவு தொகை போன்ற பிற நிவாரணஙகள் பரிசீலிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின்படி வளர்ச்சி கட்டணமாக வசூல் செய்யப்பட்ட ரூபாய் 1000/– (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழஙகுமாறு எதிர்மனுதாரர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

8.2 மேல்முறையீட்டாளரால் மின் இணைப்பு எண் 008–108–607–ல் மின் கட்டணம் தாமதமாக செலுத்தப்பட்டுள்ளதால், மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டு மறு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மறு இணைப்பின்போது செலுத்தப்பட்ட ரூபாய் 117/– ஐ மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழஙக இயலாது என முடிவு செய்யப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

8.4 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 59/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>
1. திரு. S.மகேஷ்,
த/பெ. N.N. சுப்பிரமணியன்,
348, விவேகானந்தர் சாலை,
நாராயணவலசு,
ஈரோடு – 638 101.

2. செயற்பொறியாளர்/இ&ப/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி செயற்பொறியாளர்/இ&ப/மேற்கு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

4. உதவி மின்பொறியாளர்/நாராயணவலசு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நசியனூர் மெயின் ரோடு,
நாராயணவலசு, ஈரோடு – 638 009.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, இ.வி.என். ரோடு, ஈரோடு – 638 009.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.